1968 மார்ச் 25]

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : போலீஸ் பாது காப்பு என்ற பெயரில் சமூகத்தில் உயர்நிலை வகித்துக்கொண்டிருக் கிறவர்கள், அரசாங்கத்தில் உயர்ந்த மட்டத்தில் பணியாற்றிய வர்கள் ஆகியவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று அரசு கருதினல், அப்பேர்ப்பட்டவர்களுக்கு அரசு பாதுகாப்பு அளித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில வெள்ளிக்குறி * இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

கச்சத் தீவின் மீது இலங்கை அரசு .உரிமை கொண்டாடல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் ஒரு தீர்மான அறிவிக்கை கொடுத்திருக்கிருர். அவர் தற்போது இடத்தில் இல்லை. அடுத்து, திரு. ஏ அ. சுப்பாராஜா அவர்களின் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 41-ன் கீழ், "நமது தமிழகத்தைச் சார்ந்த கச்சத் தீவை இலங்கை அரசாங்கம் உரிமை கொண்டாடுவதைக் குறித்து நமது தமிழக அரசு, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கையைப்பற்றிய" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : தலைவர் அவர்களே, கச்சத் தீவின் சொந்தம் குறித்து புது டில்லி இந்திய அரசின் வெளிவிவகார அமைச்சகம் ஏற்கெனவே ஆலோசித்து வருகிறது. கச்சத் தீவின் உடைமை உரிமை பற்றிய செய்கை விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை அதுகுறித்த ஆவணங்களுடன் அனுப்பிவைக்குமாறு இந்த அரசாங்கத்தை இந்திய அரசு கேட்டுள்ளது. இது குறித்து அறிக்கை ஒன்று இந்திய அரசுக்கு அனுப்பப்படுகிறது. இரு நாடுகளின் நலன் கருதி இதனை மேற் கொண்டு இங்கு விவாதிக்காமல் இருப்பது நல்லது.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, இன்றைய தினம் பத்திரிகைகளில் பார்க்கும்போது, கச்சத் தீவு ஏதோ இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தம் என்ற முறையில் அந்த போர்க் கப்பல்கள் எல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்ற நிலைமை

இருப்பதாலே, அதற்கு வேண்டிய துரிதமான நடவடிக்கைகளை எடுக்க, தொடர்பான தஸ்தாவேஜுகளை இராமநாதபுரம் ராஜா அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்று, அனுப்பப்பட்டதா, இல்லையா என்பதை தெளிவுபடுத்த வேண்டுமென்று விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, அதே பத்திரிகைகளில் இன்னொரு செய்தியையும் படித்தேன். இரு நாடுகளின் யாத்திரிகர்களும் அந்தத் தீவிற்குச் சென்று திருவிழாவை நல்ல முறையில் கொண்டாடினார்கள். இது ஒரு அரசுகளுக்கும் நல்ல தோழமை இருப்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சனையை இங்கு அதிகமாக விவாதிக்காமல் இருப்பதுதான் நல்லது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தற்பொழுது திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தன்னுடைய இருப்பிடத்தில் இருக்கிறார். அவை அனுமதியளித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரும்பினால், அவருடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தை கொண்டுவந்து விடையளிக்கலாம்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நாளைய தினத்திற்கு அந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்களுடைய கவன ஈர்ப்புத் தீர்மானம் நாளையதினம் எடுத்துக் கொள்ளப்படும்.

3. அறிக்கை அளித்தல்.

(i) உறுப்பினர் திரு வ. ஜார்ஜ் மீதுள்ள உரிமை மீறல் வழக்கு பற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, அவை உரிமைக் குழுவின் அறிக்கையை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் பேரவைமுன் கொண்டுவருவார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. ஜார்ஜ் அவர்கள் பேரவைத் தலைமை மீது ஒருதலைக் குற்றம்சாட்டி, அவையின் உரிமையை மீறியதாக ஏற்பட்ட வழக்குபற்றிய அறிக்கையை அவையின் முன் வைக்கிறேன்.

4. 1967-68-ம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதி அறிக்கை— பேரவைமுன் வைத்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1967-68-ம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகளைச் சட்டப் பேரவை முன்வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை ஆற்றுவார்.